# கந்தர் அநுபூதி

**காப்பு:**

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத்தருள் சண்முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

**நூல்**

1. ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே.

2. உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனும் நீயலையோ
எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

3. வானோ புனல்பார் கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்ட இடம்
தானோ பொருளாவது சண்முகனே.

4. வளைபட்டகைம் மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழு சூருரமும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடு வேலவனே.

5. மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே

அகமாடை மடந்தைய ரென்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

6. திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியா என வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயாபரனே.

7. கெடுவாய் மனனே கதிகேள் கரவா-
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

8. அமரும்பதி கேள் அகமாம் எனுமிப்
பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே.

9. மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே.

10. கார்மாமிசை காலன்வரில் கலபத்-
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே.

11. கூகாவென என்கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலு கவி-
த்யாகா சுரலோக சிகாமணியே.

12. செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மாஇரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே.

13. முருகன் தனிவேல் முனி நம் குருவென்-
றருள் கொண்டறியார் அறியும் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்-
றிருளன் றொளியன் றென நின்றதுவே.

14. கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்-
றுய்வாய் மனனே ஒழிவா ஒழிவாய்
மெய்வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவா வினையே.

15. முருகன் குமரன் குகனென்று மொழிந்-
துருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொரு புங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

16. பேராசை யெனும் பிணியில் பிணிபட்-
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் பட வேலெறியும்
சூரா சுரலோக துரந்தரனே.

17. யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

18. உதியா மரியா உணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா

அதிகா அநகா அபயா அமரா
வதிகாவல  சூர பயங்கரனே.

19. வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா
அடியந்தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே.

20. அரிதாகிய மெய்ப்பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே.

21. கருதா மறவா நெறிகாண எனக்-
கிருதாள் வனசந்தர என்றிசைவாய்
வரதா முருகா மயில் வாகனனே
விரதா சுரசூர விபாடணனே.

22. காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவ மெய்தியவா
பாளைக்குழல் வள்ளிபதம் பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே.

23. அடியைக் குறியா தறியாமையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக்ரம வேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குணபூதரனே.

24. கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேனருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல புரந்தர பூபதியே.

25. மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்-
தையோ அடியேன் அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய் மயிலேறிய சேவகனே.

26. ஆதார மிலேன் அருளைப் பெறவே
நீதானொரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத மனோ
தீதா சுரலோக சிகாமணியே.

27. மின்னேநிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே.

28. ஆனா அமுதே அயில்வேலரசே
ஞானாகரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

29. இல்லேயெனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையும் சுடர் வேலவனே.

30. செவ்வான் உருவில் திகழ்வேலவன் அன்-
றொவ்வாத தென உணர்வித்தது தான்
அவ்வா றறிவார் அறிகின்றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப்பதுவே.

31. பாழ்வாழ் வெனுமிப் படுமாயையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே

தாழ்வானவை செய்தனதாம் உளவோ
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே.

32. கலையே பதறிக் கதறிக் தலையூ-
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையனே.

33. சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி யென்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணாகரனே.

34. சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே.

35. விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்
மதிவாணுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா சுரபூபதியே.

36. நாதா குமரா நமவென் றரனார்
ஓதா என ஓதிய தெப்பொருள் தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பத சேகரனே.

37. கிரிவாய் விடுவிக்ரம வேலிறையோன்
பரிவாரமெனும் பத மேவலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவாய் அடியொடும் அகந்தையையே.

38. ஆதாளியை ஒன்றறியேனை யறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே.

39. மாவேழ் சனனம் கெட மாயைவிடா
மூவேடணை என்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடி தோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே.

40. வினையோட விடும் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்-
தினையோ டிதணோடு திரிந்தவனே.

41. சாகா தெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகம் செயுநாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞானொப தேசிகனே.

42. குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைக் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்-
றறிவற் றறியாமையும் அற்றதுவே.

43. தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

44. சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ

வீடும் சுரர்மாமுடி வேதமும் வெங்-
காடும் புனமும் கமழும் கழலே.

45. கரவாகிய கல்வியுளார் கடைசென்-
றிரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுத குஞ்-
சரவா சிவயோக தயாபரனே.

46. எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே.

47. ஆறாறையும் நீத்ததன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறுளதோ
சீறாவருசூர் சிதைவித் திமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.

48. அறிவொன் றறநின் றறிவார் அறிவில்
பிறிவொன் றறநின்ற பிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென்றவ ரோடுறும் வேலவனே.

49. தன்னந்தனி நின்றது தானறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப்பதுவோ
மின்னும் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னம் களையும் க்ருபைசூழ் சுடரே.

50. மதிகெட்டறவாடி மயங்கி அறக்-
கதிகெட்டவமே கெடவோ கடவேன்
நதிபுத்திர ஞான சுகாதிப அத்-
திதிபுத்திரர் வீறடு சேவகனே.

51. உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

கந்தர் அநுபூதி முற்றிற்று.